Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

பக்கங்கள் 12

சுடர் : 38
கதிர் : 33

வியாழக்கிழமை 29 டிசெம்பர் 2022

மார்கழி 14 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2053

# சீனாவின் தலையீட்டால் இலங்கைக்கு நெருக்கடி



## இழுபறியில் நாணய நிதிய உதவிகள்

## முறுகிக்கொள்ளும் உலக நாடுகள்

## நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

**கொழும்பு, டிசெம்பர் 29**

**சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கை நிதி உதவி பெறும் விவகாரம் இழுபறியில் உள்ளது. சீனாவின் மத்தியஸ்தமே அதற்குக் காரணம் - இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.** »11



## ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை

காரைநகர், டிசெ.29

காரைநகர் ஈழத்துச்சிதம்பர மார்கழித் திருவாதிரை உற்வசம் நேற்று புதன்கிழமை ஆரம்பமானது. திருவாதிரை உற்சவம் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. »11



## சீனத் தூதரகப் பிரதிநிதிகள் கோட்டையில் நேற்று நோட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ.29

இலங்கைக்கான சீனத் தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் நேற்று மாலை யாழ்ப்பாணம் கோட்டைக் குச் சென்றுள்ளனர். அவர்களில் ஒருவர் பட்டு வேட்டியுடன் சென்றிருந்தார். »11

## போதை ஊசி ஏற்றியதால் இளைஞன் யாழில் சாவு!

### தொடர்கின்றது அவலம்

யாழ்ப்பாணம், டிசெ.29

அளவுக்கதிகமான போதைப் பொருளை ஊசி மூலம் ஏற்றிய இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் »11



## ஆறுகால்மடத்தில் சிக்கிய 5,000 போதை மாத்திரைகள்

### இளைஞர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.29

5 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். »11

### யாழில் நடைபெறவுள்ள

## சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்கிறார் ரணில்!

கொழும்பு, டிசெ.29

இலங்கையின் 75ஆவது சுதந்திர.தின நிகழ்வுகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றுதலுடன் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறும் என்று ஜனாதிபதி »11

## சீன அரசின் அரிசியால் உணவு ஒவ்வாமையா?

### சமூகவலைத்தளங்களில் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.29

சீனாவால் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்படும் அரிசி தொடர்பில் மக்களிடையே »11

## வீடுடைத்துத் திருட முயற்சி; மக்களால் முறியடிப்பு!

சாவகச்சேரி, டிசெ.29

வீடு உடைத்துத் திருட முயன்றார் என்று கூறப்படும் ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக் »11

## விக்னேஸ்வரன் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த செல்வம்!

யாழ்ப்பாணம், டிசெ.29

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தலைமையில் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஓரணியில் திரட்டும் நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரனின் »11

## கொரோனா கட்டுப்பாடுகள்? ஓரிரு நாள்களில் தீர்மானம்!

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.29

கொரோனா சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் தொடர்பாக இன்னும் ஓரிரு நாள்களில் உத்தியோகபூர்வத் தீர்மானம் எடுக்கப்படும் »11

## இலங்கையூடாக மதுரை சென்ற இருவருக்கு கொரோனா!

கொழும்பு, டிசெ.29

சீனாவில் இருந்து இலங்கை ஊடாக தமிழகத்தின் மதுரைக்குச் சென்ற இருவருக்கு »11

## தமிழ் அரசியல் தலைமைகள் முரணைக் களையவேண்டும்!

### பாடமெடுக்கின்றது அரசதரப்பு

கொழும்பு, டிசெ.29

தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கிடையிலான முரண்பாடுகளைக் களைந்துவிட்டு தமிழ் மக்களின் எதிர்கால நலனில் அக்கறை செலுத்த வேண்டும். அரசியல் தீர்வைக் காண்பதற்கான பயணத்தில் ஜனாதிபதியுடன் அவர்கள் கைகோர்க்கவேண்டும் - இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் மீண்டும் சீனாவின் உதவிகள்

## ஒருதொகுதி உலருணவுகள் கையளிப்பு

கொழும்பு, டிசெ. 29

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் அண்மைக்கால மாக தனது உதவித் திட்டங்களை விரிவாக்கியிருக்கும் சீனா, தனது உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக ஒருதொகுதி உலருணவுகளை நேற்று வழங்கியுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையின் அமுலாக்கத்தில் குறித்த உலர் உணவுப் பொதிகள் மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலையில் வைத்து வழங்கப்பட்டன.

இதன்போது இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பொறுப்பாளர், பிரதித் தூதுவர் ஹவெய், இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் தலைமை அரசியல் அதிகாரி மற்றும் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் லுவோ சோங், இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் மூன்றாம் நிலை செயலாளர் வென்சாங், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளைத் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளை தலைவர் ஜே.கெனடி, இராணுவ உயர் அதிகாரிகள் இணைந்து குறித்த உலருணவுப் பொதிகளை வழங்கினார்கள்.

மேற்படி உதவித்திட்டத்துக்காக மன்னார் மாவட்ட செயலகத்தில் இருந்து ஆயிரத்து 380 வறிய மற்றும் பெண் தலைமைக் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 300 குடும்பங்களுக்கு இந்த உலருணவுகள் வழங்கப்பட்டன. (ம)

# சீனாவால் யாழில் கற்றல் உதவிகள்

சாவகச்சேரி, டிசெ. 29

இலங்கைக்கான சீன உதவித் தூதுவர் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு வருகை தரும் அவர் 3 மில்லியன் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை கையளிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்களின் கவனத்தை ஈர்த்து வடக்கு மாகாணத்தில் ஊடுருவும் வகையில் பல்வேறு உதவித் திட்டங்களை சீனா அண்மைக் காலமாக கையளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# 5,000 ரூபா கொடுப்பனவுக்கு செலவழிந்தது 2 ,000 ரூபா!

## பயனாளிகள் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ.29

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெறுவதற்கான பதிவுகளை மேற்கொள்ள 2 ஆயிரம் ரூபா செலவிட்டு சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு செல்ல நேரிட்டுள்ளது என பயனாளிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு 5 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தில் தெல்லிப்பழை, நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், சங்கானை, மருதங்கேணி மற்றும் சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களில் தெரிவுசெய்யப்பட்ட 18 ஆயிரத்து 918 பயனாளிகளுக்கு கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் முதலாவது கொடுப்பனவு வழங்கப்பட்டது.

அதற்கான இரகசிய இலக்கமும் குறுந்தகவல் ஊடாக உரியவர்களின் தொலைபேசிகளுக்கு அனுப்பப்பட்டன.

இந்தநிலையில் இரண்டாம் கட்ட கொடுப்பனவு கடந்த 20 திகதி முதல் வழங்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்ட போதும் சிலருக்கே குறுந்தகவல்கள் கிடைத்தன. அதனையடுத்து குறுந்தகவல் கிடைக்கப்பெறாதவர்கள் சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு நேற்று புதன்கிழமை அழைக்கப்பட்டனர்.

அரச சார்பற்ற நிறுவனத்தால் இந்தப் பதிவுகள் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டன. இதற்கென பல்வேறு இடங்களிலிருந்து 500க்கும் மேற்பட்ட பயனாளிகள் வருகை தந்தனர்.

இதன்போது முதியோர்கள் பலர் 2 ஆயிரம் ரூபா முச்சக்கர வண்டிக்கு செலுத்தி 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெற வருகை தந்தோம் என கவலை தெரிவித்தனர்.

அத்துடன் கொடுப்பனவை பெற வந்தோரில் அதிகளவானோர் முதியோர் என்பதால் பதிவுகளை பிரதேச செயலக வளாகத்தில் நடத்துமாறு கோரியபோதும் மாடியில் நடத்தப்பட்டதால் பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுக்க நேரிட்டதாக பயனாளிகள் விசனம் தெரிவித்தனர். (ச-27)

# திரிபோஷா உற்பத்தி: ஒப்பந்தம் கைச்சாத்து



கொழும்பு, டிசெ. 29

பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் நிறை குறைவான குழந்தைகளுக்குத் தேவையான திரிபோஷாவை தடையின்றி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தென்னாசிய கேட்வே டேர்மினல்ஸ் நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் குறித்த நிறுவனத்தால் ஒரு வருட காலத்துக்குத் தேவையான திரிபோஷா உற்பத்திக்கான மூலப்பொருள்கள் வழங்கப்படும். இது அந்த நிறுவனத்தின் நிவாரணமாக வழங்கப்படுவதோடு, இதற்காக 185 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தென்னாசிய கேட்வே டேர்மினல்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்றதிகாரி ரொமேஷ் டேவிட், சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த மற்றும் திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். (ம)

# உயிரைப் பணயம்வைத்து சிறுமியை மீட்ட மாணவன்

## குவியும் பாராட்டுகள்

கொழும்பு, டிசெ. 29

தன்னுயிரை பணயம் வைத்து வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட சிறுமியை காப்பாற்றிய மாணவன் அனைவராலும் பாராட்டப்பட்டு வருகின்றான்.

பிபில - மெதகம பகுதியில் தாயுடன் சென்ற சிறுமியொருவர் பெல்லன் ஓயாவின் பாலத்தை கடக்க முயன்றவேளை திடீரென வீழ்ந்த நிலையில் நீரில் அடித்துச் செல்லப்பட்டார்.

மகளை காப்பாற்றுமாறு அருகிலிருந்தவர்களிடம் தாயார் கதறி உதவிகோரியுள்ளார். சீரற்ற காலநிலை மற்றும் நீரோட்ட அதிகளவு உள்ளிட்டவற்றால் நீரில் இறங்கி சிறுமியை காப்பாற்ற எவரும் முன்வரவில்லை. இதன்போது பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்த 17 வயதுடைய உயர்தரப் பாடசாலை மாணவரொருவர் தனது உயிரைப் பொருட்படுத்தாமல் ஆற்றில் குதித்து 50 மீற்றர் தூரத்துக்கு மேல் அடித்துச் செல்லப்பட்ட சிறுமியை பலத்த முயற்சி எடுத்து காப்பாற்றினான். மாணவனின் இந்த துணிகர செயலை தற்போது பலரும் பாராட்டி வருகின்றனர். (ச-இ)

20 கிராம்

# ஐஸ் போதைப்பொருளுடன் வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, டிசெ. 29

உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளுடன் வவுனியாவில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி இளைஞர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடம் இருந்து 20 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது. சந்தேகநபர் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

ஐந்து கிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்தால் மரண தண்டனை விதிக்கும் சட்டம் நாட்டில் நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-18)

# கட்டுமானப் பொருள்களை கொண்டுசெல்ல புதிய நடைமுறை!

கொழும்பு, டிசெ. 29

மணல், கல் மற்றும் களிமண் உள்ளிட்ட கட்டுமானப் பொருள்களைக் கொண்டுசெல்வதற்கு, புதிய நடைமுறைகள் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் கொண்டுவரப்படவுள்ளன என்று புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் மணல், கல் மற்றும் கட்டுமான பொருள்களை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரங்களில் வாகன இலக்கம் மற்றும் பொருள்கள் கொண்டு செல்லப்பட வேண்டிய வீதி என்பன உள்ளடக்கப்படாமையால் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் பிரேம் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட விசேட கண்காணிப்பை அடுத்து, எதிர்வரும் 2ஆம் திகதி முதல் அனைத்து போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களிலும் வாகன இலக்கம், போக்குவரத்து பாதை உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டில் டெங்கு அதிதீவிரம்



யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக்காலமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் அதிகமான மரணங்களும் பதிவாகின்றன. எனவே பொதுமக்கள் கூடுதல் அவதானத்துடன் செயற்பட வேண்டும் – இவ்வாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்தில்; இதுவரையான காலப்பகுதியில்; 3 ஆயிரத்து 294 பேருந்து டெங்குத் தொற்று உறுதி செய்யப்பட்டதுடன், ஒன்பது மரணங்களும் பதிவாகியுள்ளன. கடந்த ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதத்தில் பருவப்பெயர்ச்சி மழையின் பின் யாழ். மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. ஒக்டோபர் மாதத்தில் 231 டெங்கு நோயாளர்களும், நவம்பர் மாதத்தில் 306 டெங்கு நோயாளர்களும் மற்றும் இந்த மாதத்தில் இதுவரையில் 570 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஐந்து வருடங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் மரணங்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது. ஆனால், இந்த வருடம் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். இந்த இறப்புக்களில் பல, நோயாளர்கள் தாமதமாக மருத்துவ ஆலோசனையைப் பெற்றதாலேயே சம்பவித்துள்ளது. எனவே, டெங்குத் தொற்றுக்கான அறிகுறிகள் எவருக்காவது தென்பட்டால், அவர்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனையை நாடுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றார். (ம)



## ஐயப்ப ஊர்வலம்; பக்தர்கள் பரவசம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐயப்ப சுவாமி ஊர்வலத்தில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.

நல்லூர் ஆலய முன் வீதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊர்வலம் பருத்தித்துறை வீதி ஊடாக ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ். வீதியை அடைந்து பலாலி வீதியூடாக கோண்டாவில் ஐயப்பன் ஆலயத்துக்கு ஊர்வலமாக சென்றடைந்தது. அலங்கரிக்கப்பட்ட யானையில் சுவாமி திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ச-20)



## ‘தென் தீவக மகுடம்’ நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 29

வேலணை பிரதேசசபையின் மண்டைதீவு பொது நூலகத்தால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் மண்டைதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் சிறப்பம்சமாக ‘தென் தீவக மகுடம்’ எனும் நூல் வெளியிடப்பட்டது.

வேலணை பிரதேசசபையின் செயலாளர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சபை தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். (ச)



## யாழ். பல்கலையில் வெம்பா பாராயணம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவின் வழிகாட்டலில் திருவெம்பாவையை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் திருவெம்பாவை பாராயணம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரா ஆலய முன்றிலில் பக்தியூர்வத்துடன் ஆரம்பமாகிய திரு வெம்பாவை பாராயணம் பல்கலைக்கழகத்தினூடாக கலட்டி சந்தியை அடைந்து தபால் பெட்டி சந்தியூடாக மீண்டும் பரமேஸ்வரா முன்றிலில் பாராயணம் முடிவுற்றது.

தொடர்ச்சியாக பத்து தினங்கள் திருவெம்பா பாராயணம் இடம்பெறவுள்ளதுடன் எதிர்வரும் ஐந்தாம் திகதி மார்கழி விழா கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் நிகழ்த்தப்படவுள்ளது. (ச-125)

## திருவெம்பாவையையொட்டி ஈழத்துச் சிதம்பர யாத்திரை


யாழ்ப்பாணம், டிசெ. 29

திருவெம்பாவையை முன்னிட்டு சைவ மகா சபையின் ஏற்பாட்டில் ஈழத்துச் சிதம்பர பாதயாத்திரை எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈச்சரத்தில் 21 அடி உயர சிவபெருமான் சொரூபத்துக்கு முன் ஆரம்பமாகும் இந்தப் பாதயாத்திரை, சாந்தை, பனிப்புலம், பறாளாய், சுழிபுரம் மேற்கு, பெரியபுலோ. சுழிபுரம் சந்தி ஊடாக நகர்ந்து பொன்னாலை மூளாய் இராவணேச்சரம் சென்று அங்கிருந்து காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தை அடையும்.

பாதயாத்திரையாகச் செல்லும் அடியவர்களுக்கு பொன்னாலைச் சந்தியிலுள்ள நாராயணன் தாக சாந்தி நிலையத்தால் அன்னதானம் அளிக்கப்படும்.

அறநெறிப் பண்புகளையும் மேலோங்கச் செய்வதன் மூலம் மனித நேயமிக்க சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு கடந்த 10 வருடங்களாக இந்த ஆன்மிப் பாதயாத்திரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என சைவ மகாசபை தெரிவித்தது. (ச-27)



யாழ்ப்பாணம் புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு அமைக்கப்பட்ட பாலன்குடில் முன்பாக போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (ச)

## நாளைமறுதினம் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், டிசெ. 29

சுழிபுரம் பறாளாய் நாவலர் சனசமூக நிலையம் மற்றும் பறாளாய் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அமரர் தனுராஜ் என்பவரின் நினைவாக குருதிக்கொடை இடம் பெறவுள்ளது.

நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை நாவலர் சனசமூக நிலையத்தில் இந்தக் குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ச)

## புதுக்குடியிருப்பு வாசிக்கு ரூ. 20 லட்சம் அதிர்ஷ்டம்

முல்லைத்தீவு, டிசெ. 29

புதுக்குடியிருப்பு திம்பிலி பகுதியைச் சேர்ந்த ஒருவர் லொத்தர் சபை சீட்டிழுப்பில் 20 இலட்சம் ரூபாவை வென்றுள்ளார். கடந்த வாரம் தேசிய லொத்தர் சபையால் புதுக்குடியிருப்பு முகவரூடாக விநியோகிக்கப்பட்ட மஹஜன சம்பத சீட்டிழுப்பிலேயே இந்தப் பரிசுத்தொகை வெல்லப்பட்டது.

இதேவேளை வடக்கில் பல விற்பனை முகவரூடாக விற்பனையாகிவரும் லொத்தர் சபையின் சீட்டிழுப்பில் பல லட்சம் அதிர்ஷ்டம் அண்மைக்காலமாக கிடைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டண உயர்வு இல்லையேல் பலமணிநேரம் மின்வெட்டு

## அமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.29

தினமும் பல மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்ட வாழ்க்கை முறைக்கு மக்கள் மாறிக் கொள்ளவேண்டியிருக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.



இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

மின்கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்றால் நாளாந்த மின்வெட்டை மக்கள் எதிர்நோக்க வேண்டும். பல மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்ட வாழ்க்கைமுறைக்கு மக்கள் மாறிக் கொள்ளவேண்டியிருக்கும்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 5, 9 மற்றும் 13ஆம் திகதிகளில் 3 நிலக்கரி கப்பல்கள் இலங்கையை வந்தடையவுள்ளன.

இலங்கைக்கான புதிய நிலக்கரி விநியோகத்துக்கான டெண்டர் சட்டமா அதிபரின் பரிந்துரைகளைப் பெற்ற பின்னர் இந்தோனேஷிய நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

# ஆசு மாரசிங்க காணொலி ஹிருணிகா வாக்குமூலம்

கொழும்பு, டிசெ.29

ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் பேராசிரியர் ஆசு மாரசிங்கவினுடையது என்று கூறப்படும் காணொலி தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம், தாம் கோரிக்கை விடுத்தேன் என்று ஹிருணிகா தெரிவித்தார்.

ஆசு மாரசிங்க தனது முன்னாள் காதலியால் பகிரங்கப்படுத்தப்பட்ட காணொலி தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் சனிக்கிழமை முறைப்பாட்டைசெய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டில் மாரசிங்க, காணொலி செம்மைப் படுத்தப்பட்டது என்றும் தன்னைப் பழிவாங்கும் செயலாகப் பயன்படுத்தப்படுத்தப்பட்டது என்றும் குற்றம் சுமத்தியிருந்தார். ஆதர்ஷா கரந்தன என்ற பெண், தமது வளர்ப்பு நாயின் நடத்தையில் சந்தேகமடைந்த நிலையில், மாரசிங்க தனது செல்ல நாயை அவர்களது அறையில் பாலியல் துஷ்பிரயோகம் செய்வதை இரகசியமாக காணொலி எடுத்தேன் என்று கூறியிருந்தார்.

தனது தனிப்பட்ட வாழ்க்கையை பகிரங்கப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் தனக்கு இல்லை என்றாலும், தனது வளர்ப்பு நாய்க்கு நீதி வேண்டும் என்றும் கரந்தனா வலியுறுத்தியிருந்தார்.

இதேவேளை இந்தக் காணொலி பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னர், நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஜனாதிபதி ஆலோசகர் பதவியில் இருந்து பேராசிரியர் ஆசு மாரசிங்க விலகியிருந்தார். (எ-இ)

# மோல்டாவில் இருந்துவந்த சுற்றுலாப் பயணிகள்

கொழும்பு, டிசெ.29

ஐரோப்பிய கண்டத்திலுள்ள மோல்டா நாட்டிலிருந்து பெருமளவான சுற்றுலாப் பயணிகள் முதற்தடவையாக நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்த சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் 12 நாள்கள் தமது சுற்றுலா நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர். 50 பேரைக் கொண்ட சுற்றுலாக் குழுவினர் இலங்கையின் அனைத்து சுற்றுலாத் தளங்களுக்கும் செல்ல எதிர்பார்த்துள்ளனர். இவர்களை வரவேற்பதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையின் அதிகாரிகள், விமானசேவை நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பீ.ஏ.சந்திர சிறி உள்ளிட்டவர்கள் விமான நிலையத்துக்குச் சென்றிருந்தனர். (எ-இ)

# 2023 புத்தாண்டு ராசிபலன்

மார்கழி மாதம் 17ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை வளர்பிறை தசமி திதியில், சம நோக்குடைய அஸ்வினி நட்சத்திரம், மேடம் ராசி, கன்னி லக்னத்தில், சிவம் நாமயோகத்தில், தைத்துலம் நாமகரணத்தில், நள்ளிரவு 12.01 மணிக்கு 01.01.2023 ஆம் ஆண்டு பிறக்கிறது.



## துலாம்

சகிப்புத்தன்மை மிகுந்தவர் நீங்கள். உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் சந்திரன் அமர்ந்திருக்கும் போது, 2023 புத்தாண்டு பிறக்கிறது. சகல வாய்ப்பு களையும் சரியாகப் பயன்படுத்தி முன்னேறுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். அரசியலில் செல்வாக்கு கூடும்.

சுக்கிரன் சாதகமான நட்சத்திரங்களில் செல்லும் நேரத்தில் புத்தாண்டு பிறக்கிறது. ஆக, எதையும் சமாளித்து வெற்றி பெறும் நெஞ்சுறுதி பிறக்கும். செலவுகள் இருந்தாலும் வருமானமும் உண்டு. வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள்.

குரு பகவான் உங்கள் ராசிக்கு 5ம் வீட்டில் அமர்ந்திருக்கும் நேரத்தில் புத்தாண்டு பிறப்பதால் நினைத்த காரியம் நிறைவேறும். எதிர்பார்த்த பணம் வரும். வீடு, மனை வாங்குவீர்கள். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். கௌரவப் பதவிகள் தேடி வரும். சுபநிகழ்ச்சிகள் நடக்கும். குழந்தைப் பாக்கியம் உண்டாகும். வீண் செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள்.

குரு பகவான் 23.4.2023 முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்கு 6ல் மறைவதால் வீண் பதற்றம், விரயம், ஏமாற்றம், மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். வேலைப்பளு உண்டு. பணத் தட்டுப்பாட்டை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

8.10.2023 வரையிலும் உங்கள் ராசிக்கு 12ல் கேது தொடர்வதால், குலதெய்வப் பிரார்த்தனையை திருப்தியாக நிறைவேற்றி வருவீர்கள். 9.10.2023 முதல் வருடம் முடியும் வரை கேது லாப வீட்டில் அமர்வதால் செல்வாக்கு கூடும். கௌரவப் பதவிகள் தேடி வரும். செலவுகள் இருக்கும். பூர்வீகச் சொத்து விடயங்களில் பிரச்சினை எழலாம்.

புத்தாண்டுத் தொடக்கத்தில் உங்கள் ராசிக்கு 3வது வீட்டிலேயே சனி பகவான் அமர்ந்திருப்பதால் சவாலான காரியங்களையும் சாதாரணமாக முடிப்பீர்கள். 29.3.2023 முதல் 23.8.2023 வரை சனிபகவான் அதிசாரத்தில் 4ம் வீடான கும்ப ராசியில் சென்று அமர்வதால், வேலைச்சுமை, வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் வரக்கூடும்.

வியாபாரிகளுக்கு இந்தப் புத்தாண்டில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும்.

உத்தியோகஸ்தர்களுக்கு, அலுவலகத்தில் நிலையற்றச் சூழல் உருவாகும். எதிர்பார்த்த சலுகைகளும், பதவி உயர்வும் தாமதமாக வந்து சேரும்.

மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு, உங்களைச் சுற்றியுள்ள சிலரின் சுயநலப் போக்கை உணரவைப்பதுடன், சாமர்த்தியமாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை உணரவைப்பதாக அமையும்.

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்லவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்புள்ளது.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவைப்படுகிறது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** உற்சாகத்துடன் செயல்படும் நாள். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அலைச்சலும் சோர்வும் ஏற்படும். பிரச்சினைகள் நீங்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படும். பணஉதவி கிடைக்கும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். அந்நியோன்யம் அதிகரிக்கும். பணப்புழக்கம் இருந்தாலும் திடீர் செலவுகளால் கையிருப்பு குறையக்கூடும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**மீனம்:** சிந்தித்துச் செயல்படவேண்டிய நாள். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

"அறிவுத் தேவையைவிட, கவனக் குறைவுதான் அதிக கஷ்டத்தை உண்டாக்கிவிடுகிறது"

– வின்ஸ்டன்ட் சர்ச்சில்

## எமக்கான குரலைப் பலப்படுத்துவோம்

இலங்கையில் நீண்டகாலமாகப் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எத்தனம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் அவர் தலைமையிலான அரசாங்கத்திலும் இருப்பது உண்மையாயின், வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தினரின் வசமுள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அத்துடன் நீண்டகாலமாக சிறைகளில் உள்ள அனைத்து அரசியல் கைதிகளும் விடுவிக்கப்படுவதுடன் 'அவர்களுக்கு நியாயம்' வழங்கப்படவும் வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றார் பேராசிரியர் திஸ்ஸ விதாரண. இவை தீர்க்கப்படாத பட்சத்தில், ரணிலின் ஆட்சியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதென்பது சாத்தியமே இல்லை என்றும் அவர் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஒரு தீவிர இடதுசாரிச் சிந்தனையாளர். அவரது அரசியல் சித்தாந்தம் என்பது சமூக சமத்துவத்தை ஆதரிக்கின்ற அல்லது அதை ஏற்றுக்கொள்கின்ற போக்கு. இந்தக் கருத்தியலானது இன அடக்குமுறைகளுக்கும் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கும் எதிரானது. ஆதலால், பேராசிரியர் திஸ்ஸ விதாரண இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருப்பதில் ஆச்சரியத்துக்கிடமில்லை. அவருடைய கருத்துக்கள் ஒவ்வொன்றும் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியவை.

நாடாளுமன்றத்திலும் பொது இடங்களிலும் அரசியல் தீர்வு குறித்த பேச்சுக்கள் மற்றும் கலந்துரையாடல்களின்போது 'சமஷ்டி' என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகள், ஜனாதிபதியுடனான சர்வகட்சிக் கூட்டத்தில் வாய்மூடி மௌனிகளாக இருந்தமையையும் திஸ்ஸ விதாரண கண்டிக்கத் தவறவில்லை. அந்த வகையில் தமிழ்த் தரப்பினர் காலாகாலமாக கொழும்புக்கு வெளிப்படுத்தும் நல்லிணக்கச் சமிக்ஞை மற்றும் இராஜதந்திர நகர்வுகள் என்பவற்றின் பின்னுள்ள பலவீனத்தையும் பட்டவர்த்தனமாக அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார். இங்குதான் தமிழ்த் தேசியத் தலைமைகளின் நலினப்பட்ட செயற்பாட்டரசியலும் வெளிச்சமாகின்றது.

இனவாதச் சக்தி நிறைந்த இலங்கை போன்றதொரு நாட்டில் திஸ்ஸ விதாரணக்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்கவேண்டும். தமிழர்களின் இனப்பிரச்சினைகள் மற்றும் இதர விடயங்கள் தொடர்பில் தீர்வைத் தேடிக்கொண்டிருக்கும் தமிழ்த் தலைமைகள் தமது அரசியலோட்டத்துடன் திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, விக்கிரமபாகு கருணாரட்ண போன்ற உண்மையான ஆளுமைகளுடன் ஒன்றித்துப் பயணப்பட ஆரம்பித்திருக்கவேண்டும். பெரும்பான்மை மக்களுடன் இணைந்து எம் கோரிக்கைகளை வலியுறுத்துகின்றபோது அது செவிசாய்க்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் மிகை அதிகம். அவ்வாறு பெரும்பான்மை மக்கள் எமது கோரிக்கைகளை தங்கள் கோரிக்கைகளாக வலியுறுத்த வேண்டுமாயின் அதற்குரிய தளமாக இருப்பவர்கள் இந்த திஸ்ஸ விதாரண, விக்கிரமபாகு போன்ற ஆளுமைகளே. எனினும் இவர்கள் பெரும்பான்மையினரில் சிறுபான்மையினர். இருப்பினும் நாளடைவில் அவர்களின் கருத்துக்கள் ஏனைய சிங்களமக்களுக்கும் போய் சேரும் வகையிலான நிகழ்ச்சிநிரல் எதுவும் தமிழர்களிடம் இல்லை. காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு என்று எந்தவொரு விடயத்திலும் இத்தகைய பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த தமிழர்சார்பு சக்திகளுடன் இணைந்து எம் கோரிக்கைகளை நாம் வலியுறுத்தாமை என்பது ஆகப்பெரும் பலவீனமே. சஜித், மஹிந்த, ரணில் என்று பேரினவாதிகளுடம் மாறிமாறி பகடையாட்டம் ஆடிக்கொண்டிருக்காமல், மாற்று யோசனையாக நமக்காகக் குரல்தரும் பெரும்பான்மையினச் சகோதரர்களின் கரங்களைப் பலப்படுத்வது தொடர்பாக சிந்திப்பதுடன் அதற்குச் செயல்வடிவமும் கொடுக்க வேண்டும். அதுவே நிரந்தரத்துவத் தீர்வுக்கும் வழிகோலும்.




# கொழும்பின் அதிகாரத்தை நிச்சயம் கைப்பற்றுவோம்!

## அரகலய போராட்டக்காரர்கள் சபதம்

கொழும்பு, டிசெ. 29

உள்ளூராட்சித் தேர்தலுக்கான போராட்டத்தை எதிர்கொள்வதற்காகப் புதிய படை ஒன்று உருவாக்கப்படும். இதன்மூலம் கொழும்பில் அதிகாரம் கைப்பற்றப்படும் என்று காலிமுகத்திடல் போராட்டத்தின் முன்னணி செயற்பாட்டாளர்களில் ஒருவரான தானிஷ் அலி தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு எரிக்கப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பிலான வாக்குமூலத்தைப் பதிவுசெய்வதற்காக அவர் நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டார். இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(ம)

# மின்கட்டணத்தை செலுத்தாதோரின் இணைப்புக்களை துண்டிக்கோம்!

## மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

பொதுமக்கள் நெருக்கடியில் உள்ள இந்த நேரத்தில், மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும் விதமாக மின் கட்டணத்தை மேலும் அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்தால், அதனைத் தோற்கடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்று இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீண்டும் மின்கட்டணத்தை உயர்த்தக் கூடாது. சட்ட விரோதமாக மின்கட்டணத்தை உயர்த்தினால், கட்டணம் செலுத்த முடியாமல் உள்ள வாடிக்கையாளர்களின் மின் இணைப்பை துண்டிக்காமல் இருக்க எங்கள் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் முடிவெடுப்பார்கள்.

கடந்த தடவை மின்கட்டணம் உயர்வடைந்தமையானது மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக பொருளாதாரத்தில் அடித்தட்டில் உள்ளவர்களும், சிறிய வணிகர்களும், விடுதிகளின் உரிமையாளர்களும் பெரும் பாதிப்பை எதிர்கொண்டனர். மின் கட்டணத்தை மீண்டும் ஒருமுறை உயர்த்துவதற்கு அமைச்சரவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ஆனால், ஜனாதிபதியும் துறைசார் அமைச்சரும் மக்கள் பிரச்சினைகளில் அக்கறையின்றிச் செயற்பட்டு வருகின்றனர். மக்களை மேலும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி வேலைநிறுத்தம் செய்ய நாம் தயாரில்லை. ஆனால், மின்சாரக் கட்டண உயர்வை தோற்கடிக்க அனைத்துத் தரப்பினருடனும் ஒன்றிணைந்து செயற்படுவோம் - என்றார். (ம)

நாளை

30.12.2022

வெள்ளிக்கிழமை

மார்கழி 15

சுபநேரம் : 06.29 - 07.59

ராகுகாலம் : 10.59 - 12.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி மத்திக்கு முன் அமைச்சரவை மாறாது

கொழும்பு, டிசெ. 29

ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சரவையில் மாற்றங்கள் ஏற்படாது என்று ஜனாதிபதி செயலகத்தை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் செய்தியில் மேலும் உள்ளதாவது:-

அமைச்சுப் பதவிகேட்டு ரணில் விக்கிரமசிங்கவிடம் பஸில் ராஜபக்ச பல மாதங்களுக்கு முன் 12 பேர் அடங்கிய பெயர்ப்பட்டியல் ஒன்றை வழங்கியிருந்தார். பஸில் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் ஜனாதிபதி ரணில் கொஞ்சம்கூட அசையவில்லை. அதற்குக் காரணம் அந்தப் பட்டியலில் இருந்த நால்வர்தான். நாமல் ராஜபக்ச, மஹிந்தானந்த அளுத்கமகே, ஜோன்சன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்த்தன ஆகிய நால்வரே அவர்கள். மக்கள் மத்தியிலும் பெரமுனவுக்குள்ளும் இவர்களுக்கு எதிர்ப்பு இருப்பதால் இவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்க முடியாது என்று ரணில் உறுதியாகக் கூறிவிட்டார்.

சஜித் அணியில் இருந்து அரசில் இணையப் போகின்றவர்களும் அவர்கள் அமைச்சர்களாவதை விரும்பவில்லை. பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்சவையும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும் அழைத்து நிலைமையை ஜனாதிபதி விளக்கிக் கூறினார். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

வரவு - செலவுத் திட்டத்தைத் துருப்புச் சீட்டாகக் கொண்டு தமது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அமைச்சுப் பதவிகளைக் கைப்பற்றுவதற்கு அவர்கள் முயற்சி செய்தனர். சில அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீட்டைத் தோற்கடித்து ரணிலைப் பணிய வைப்பதற்கு முயற்சித்தனர். அது முடியவில்லை. ரணிலோ இந்த விடயத்தில் மிகவும் அமைதியாக இருந்தார். காரணம் அவர்களை வழிக்குக் கொண்டு வருவதற்கு அவரிடம் ஓர் ஆயுதம் இருந்தது. அதனால் ரணில் அசால்டாக நடந்துகொண்டார். இந்த விடயம் பற்றி (அந்த எம்.பிக்களின் எதிர்ப்பு பற்றி) பஸிலிடம் கூறினார் ரணில்.

'வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் எனக்கு எந்த நட்டமும் இல்லை. பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத்தான் நட்டம். வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் நாடாளுமன்றத்தைக் கலைக்க நேரிடும். அப்படிக் கலைத்தால் நாடு இப்போது இருக்கும் நிலையில் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைவார்கள். இழப்பு உங்களுக்கே அன்றி எனக்கில்லை. அமைச்சுப் பதவிக்கு ஆசைப்பட்டு இறுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழக்கப்போகிறீர்கள்' - என்றார் ரணில்.

அதனால் சற்று ஆடிப்போனார் பஸில். உண்மைதான். இது தேவையில்லாத சண்டை. மீண்டும் கட்சிக்குள் பிளவையும் வீழ்ச்சியையுமே தரும் என்று உணர்ந்த பஸில் அந்த விவகாரத்தை அப்படியே ஜனாதிபதியின் விருப்பத்துக்கே விட்டுவிட்டார்.

இந்த நிலையில், அமைச்சரவை நியமனம் காலம் தாழ்த்தப்படும் என்று அறியமுடிகின்றது. அதாவது, ஜனவரி 15ஆம் திகதி வரை சாத்தியமில்லை என்று அறியமுடிகின்றது - என்றுள்ளது. (ம-22)

## சேவை பெறுநர்களுக்கென வலி.மேற்கு சபையில் 'லிப்ட்'

யாழ்ப்பாணம் - உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் வலி. மேற்கு பிரதேசசபையில் புதிதாக அமைக்கப்பட்ட மின்தூக்கி நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. பிரதேசசபைக்கு சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகை தரும் விசேட தேவையுடையோரின் நலனைக் கருதி 6.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த மின்தூக்கி அமைக்கப்பட்டது.

நிகழ்வில் வலி. மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன், பிரதேசசபையின் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-27)



## பாலன்குடிலில் சிற்பங்கள்; மன்னாரில் தொடர் திருட்டு

### மக்கள் வேதனை

மன்னார், டிசெ. 29

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு அமைக்கப்பட்ட பாலன்குடில்களில் சிற்பங்கள் கடந்த சில வருடங்களாக தொடர்ச்சியாக திருடப்படுகின்றன.

இந்த அநாகரி செயற்பாடு குறித்து தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என மக்கள் தெரிவித்தனர்.

மன்னாரில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வரும் கிறிஸ்து பிறப்பு நிகழ்வுகளின்போது இல்லங்களிலும் வீதிகளிலும் பாலன் கொட்டில்கள் மற்றும் கிறிஸ்மஸ் மரங்கள் வடிவமைக்கப்படும்.

இவ்வாறு அமைக்கப்படும் பாலன் கொட்டில்களிலுள்ள சிற்பங்கள் கடந்த சில வருடங்களாக திருட்டுப் போகின்றன.

இந்த வருடம் மன்னார் பிரதான வீதியில் வைக்கப்பட்டிருந்த பாலன் யேசுவின் திருச்சொரூபம் அண்மையில் திருட்டுப் போயுள்ளது.

இந்தச் செயற்பாடானது மதங்களிடையே முரண்பாட்டை தோற்றுவிப்பதுடன் மனவேதனைக்குரிய விடயமுமாகும்.

இதுதொடர்பில் பொலிஸார் உடன் நடவடிக்கை எடுத்து திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்த வேண்டும் என மக்கள் மேலும் கோரிக்கை விடுத்தனர். (ச-213)

## அமைச்சரவை நியமனத்தில் எனது தலையீடு இருக்காது!

### மஹிந்த ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு. டிசெ. 29

புதிய அமைச்சரவை நியமனம் தொடர்பாக நான் எதுவும் பேசமாட்டேன். இந்த விடயத்தில் தலையிடவும் மாட்டேன் இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ச.

ரணிலுக்கும் மஹிந்தவுக்கும் இடையில் கடந்த வாரம் சந்திப்பு இடம்பெற்றது. அதில் இருவரும் தற்போதைய அரசியல், பொருளாதார விடயங்கள் தொடர்பாகப் பேசினர். அப்போது புதிய அமைச்சரவை நியமனம் தொடர்பாகவும் பேசப்பட்டது.

'புதிய அமைச்சரவை நியமனம் தொடர்பாக நான் எதுவும் பேசமாட்டேன். தலையிடவும் மாட்டேன். நீங்கள் யாரை வேண்டுமானாலும் நியமியுங்கள்' என்று ஜனாதிபதியிடம் தெரிவித்தாராம் மஹிந்த. (ம-22)

## ரணிலின் அரசாங்கத்தில் அமைச்சு தேவையில்லை

### நாமல் திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 29

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசில் எந்த அமைச்சுப் பதவியையும் நான் பொறுப்பேற்கமாட்டேன் இவ்வாறு முன்னாள் அமைச்சரும் பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் எந்தவித முரண்பாடும் இல்லை. ரணில் மூத்த அரசியல்வாதி. சிறந்த தலைவர். எனினும், அவர் தலைமையிலான தற்போதைய அரசில் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்க நான் தயார் இல்லை. எனக்கு அமைச்சுப் பதவி கிடைக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் எவரும் முரண்படவும் தேவையில்லை' - என்றார். (ம-22)

## அராலி கரைச்சியில்

## கழிவுகளை கொட்ட தற்காலிக அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 29

வலி.மேற்குப் பகுதியில் சேருகின்ற கழிவுகளை அராலி கரைச்சிப் பகுதியில் தற்காலிகமாகக் கொட்டுவதற்கு வலி.மேற்கு பிரதேச சபை நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

அராலி கிழக்கு பகுதியில் இதுவரை காலமும் கழிவுகள் கொட்டப்பட்டு வந்தன.

இந்தப் பகுதிக்குச் செல்லும் வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் அராலி கரைச்சி பகுதியில் தற்காலிகமாக கழிவுகளைக் கொட்டுவதற்கு சபை அனுமதித்துள்ளது. இவ்வாறு கொட்டப்படும் கழிவுகளை கரவெட்டி பிரதேசசபையினர் வாரத்துக்கு ஒரு தடவை ஏற்றிச்செல்வர் எனவும் சபையில் தெரிவிக்கப்பட்டது. (ச-27)

# பரு. புதிய தவிசாளர் தெரிவு கோரமின்மையால் ஒத்திவைப்பு

பருத்தித்துறை, டிசெ. 29

பருத்தித்துறை நகரசபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான கூட்டம் போதிய உறுப்பினர்கள் வருகையின்மையால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரசபையின் புதிய தவிசாளர் தெரிவுக்கான கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த முன்னாள் தவிசாளர் உள்ளிட்ட ஐவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவரும் சுயேட்சைக் குழுவின் ஒரு உறுப்பினரும் சமுகமளித்திருந்தனர்.

15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகரசபையில் ஏழு பேர் மாத்திரமே சமுகமளித்திருந்த நிலையில் போதிய கோரம் இன்மையால் தவிசாளர் தெரிவு ஒத்திவைக்கப்படுகிறது எனவும் பிறிதொரு திகதி அறிவிக்கப்படும் எனவும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்தார்.

இதேவேளை, கடந்த 5 ஆம் திகதி பருத்தித்துறை நகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் மேலதிக ஒரு வாக்கால் தோற்கடிக்கப்பட்டது. பின்னர் கடந்த வாரம் மீண்டும் பட்ஜெட் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்ற நிலையில் பருத்தித்துறை நகரசபை தவிசாளர் தனது பதவியிலிருந்து பதவி விலகுவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
16 • 07 • 1984

மறைவு
29 • 11 • 2022

கடந்த 29.11.2022 அன்று இறைவனடி சேர்ந்த
எமது அன்பு மகன்

## நடராசா முரளிதரன் (முரளி)

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எமது இல்லத்தில் இன்று (29.12.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். இந் நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

8 /3, பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

நடராசா தவமணிதேவி (தாய்)
076 834 4381, 077 071 1388

(cs48361) (2.6)

---

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்**

**விலைமனு கேள்விக்கான அழைப்பு**

## வாகன சுத்திகரிப்பு சேவை-2023

யாழ்ப்பாணம் பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான, தகைமைவாய்ந்த வாகன சுத்திகரிப்பு நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

யாழ்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட
வாகனங்களிற்கான சுத்திகரிப்பு சேவை

| பெறுகை இல | பெறுகையின் தன்மை | கேள்வி உத்தரவாத முறி | கேள்வி திறக்கும் நேரம் |
|---|---|---|---|
| RDHS/VS/2022/01 | வாகன சுத்திகரிப்பு | 30,000.00 | 17.01.2023 மு.ப 10.00 |

- வாகன சுத்திகரிப்பு சேவைக்கு மீளளிக்கமுடியாத கேள்விபத்திர பணம் ரூபா 3.000.00 ம் உத்தரவாத முறி ரூபா 30.000/= ம் செலுத்தப்பட வேண்டும். வில்லக்கேள்விதாரர்

1. மேற்படி சேவைகளுக்கான ஒரு தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும். தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் இல 572/3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கம்- 021 222 2278/ 021 222 6253 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
2. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மீளளிக்கமுடியாத வைப்புத்தொகையாக ரூபா 3000 இனை காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 30.12.2022 தொடக்கம் 13.01.2023 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விலைக்கேள்விகள் 17.01.2023 திகதி 10.00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. குறித்த விண்ணப்பங்கள 17.01.2023 காலை 10.00 க்கு விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
4. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**
021-222 3725 , 021- 222 6252 , 021- 221 4966
தொலைநகல் : 021 222 9971
மின்னஞ்சல் rdhsjaffna15@gmail.com

(cs 22491) (2.6)

---

# நினைவலைகள்

19ஆம் ஆண்டு — 40ஆம் ஆண்டு



தோற்றம்
13.08.1952

மறைவு
29.03.2003

தோற்றம்
04.10.1950

மறைவு
29.12.1982

## தம்பித்துரை சந்திராதேவி

## சின்னையா தம்பித்துரை

(யாழ். மாநகரசபை - மின் இணைப்பாளர்)

**29.12.2022**

பரிவோடு எம்மை வளர்த்து பாசமாய் அரவணைத்த கைகள்
காலமெல்லாம் எம்மை விட்டுப்போன தேனோ! கண்ட கனவுகள் நனவாகும் முன்னே
காலனவன் சடுதியாய் அழைத்தானோ! உங்கள் இனிய முகம் காணாது வாடுகிறோம் இப் புவியில்..............

**முகவரி:**
மூர்த்திவளவு,
தெல்லிப்பழை,
ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள் - தனுஜா, தர்சியா, கனிஷ்டா
மருமக்கள் - உதயன், வரேஷ், கண்ணன்
பேரப்பிள்ளைகள் - நிஷாராம், அக்ஷய், லிபின்ஷா, துவேரிஷா, அபிஷன்.

(cs.48353) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தார்த்தன் எம்.பியின் பட்ஜெட் நிதியில் உதவி



கொடிகாமம், டிசெ. 29

நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியில் தென்மராட்சிக்கு பல்வேறு உதவித் திட்டங்கள் கையளிக்கப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 3 ஆலயங்கள் மற்றும் பாடசாலைக்கு கணினி உட்பட நிதியுதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டங்களை நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சாவகச்சேரி பிரதேச செயலர் சு.உசா, சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி நகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் ஆகியோர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அந்தந்த நிர்வாகத்திடம் கையளித்தனர். (ச-159)


## பெயர் மாற்றம்

அம்மன் கோவில் அரியாலையில் வதியும் **தவராசா கதீசன்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **தவராசா சதீசன்** என மாற்றிக்கொள்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **தவராசா சதீசன்** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

தவராசா சதீசன்


## படப்பிடிப்பாளர்கள் கிளி.யில் கௌரவிப்பு

கிளிநொச்சி மாவட்ட படப்பிடிப்பாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் படப்பிடிப்பாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது. சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன், கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் வேலமாளிதன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தவிசாளர் சுரேன் மற்றும் பூநகரி பிரதேசசபையின் தவிசாளர் ஸ்ரீரஞ்சன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட ஒளிப்படப்பிடிப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ச-113)


## மடப்பள்ளி வேலை செய்வதற்கு ஆள்தேவை

வல்வெட்டித்துறை நகர மத்தியில் அமைந்துள்ள சிவன் தேவஸ்தானத்திற்கு நித்திய மடப்பள்ளி வேலை செய்வதற்கு அந்தணகுலத்தை சேர்ந்தவர் தேவைப்படுகிறது. தங்குமிட வசதி உண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : **077 706 7698**

(CR 38810)(3/6)



## அறிவித்தல்

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை.

**வட்டாரம் :- 09**
**ஆதன இலக்கம் :- 130/59**
**பிப்பிலி வீதி.**

வட்டாரம் 09, பிப்பிலி வீதி, ஆதன இலக்கம் 130/59இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று நவாலி இறை **"கரடிக்குளி"** என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 08 குழி 3.85 கொண்ட இவ்வாதனமானது நவாலி வடக்கை சேர்ந்த மருதர் சுப்பிரமணியம் அவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாலசிங்கம் என்பவருக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.சி.எஸ்.எஸ்.முத்துக்குமாரு முகாதாவில் நிறைவேறிய **3263ஆம் இலக்க 1988.07.17**ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர் எமது ஆதனப் பதிவேட்டின்படி உரிமையாளர் என காணப்படுகின்றது. இவ்வாதனத்தின் தாயுறுதியானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.சி.எஸ்.எஸ்.முத்துக்குமாரு நிறைவேறிய **3261ஆம் இலக்க 1988.07.17**ஆம் திகதிய உறுதிப்படி தாய் வழி முதுசமென மருதர் சுப்பிரமணியம் வெளிப்படுத்தல் உறுதி முடித்துள்ளார். இவ்வாதனத்தின் தாயுறுதியானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.சி.எஸ்.எஸ்.முத்துக்குமாரு நிறைவேறிய 3262ஆம் இலக்க 1988.07.17ஆம் திகதிய அறுதி உறுதிப்படி சங்கானை கிழக்கு முத்தையா தங்கராசா ஆகிய அவர்களால் மருதர் சுப்பிரமணியம் அவர்களை வந்தடைந்தது என்றும் நில அளவையாளர் திரு.எஸ். பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2019/100 ஆம் இலக்க 2019.02.07ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் **"கரடிக்குளி"** நிலப்பரப்பு 08 குழி 3.85 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத்திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து சுப்பிரமணியம் பாலசிங்கம் என்பவர்களுக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை (மானிப்பாய்) பொறுப்பாளி ஆகாது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(cs 22491) (2.6)



## மரண அறிவித்தல்

மலர்வு 15 . 11 . 1944



உதிர்வு 26 . 12 . 2022

### திருமதி இராசேந்திரன் சாவித்திரிதேவி

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மஞ்சத்தடி, இணுவிலை வசிப்பிடமாகவும் சாயுடை, மாவிட்டபுரத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேந்திரன் சாவித்திரிதேவி 26.12.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இரத்தினம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற பெ.இராசேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், கணேசலிங்கம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, யோகலிங்கம், தனபாக்கியம், சந்திராதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கலாவதி (கனடா), கணேசானந்தன் (அதிபர், யா/இளவாலை மெய்கண்டான் ம.வி), வித்தியானந்தன் (கனடா), சதானந்தன் (Co- Op Life Insurance), கலைமதி, கலைநிதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன் (கனடா), தமயந்தி, மனோரதி, செல்வரஞ்சினி, உமாபதிசிவம் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரவீன், பிரணவன், வித்தகன், கனிமொழி, தர்சிகன், சஞ்சயன், ஆரணன், கஜிந்தன், சுஜிந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.12.2022 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு சாயுடை மாவிட்டபுரத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

இ. கணேசானந்தன் - 077 628 4043
இ. சதானந்தன் - 076 743 8748

(cr 38892) (2.6)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 13 . 12 . 1943



மனங்களில் 29 . 12 . 2021

### முத்தையா சாள்ஸ் இரட்ணராசா (குஞ்சு)

புன்னகை பூத்த மலரொன்று - பூமியில்
விதைக்கப்பட்ட நாள் இன்று
ஆண்டு ஒன்று கழிந்தாலும் உங்கள்
நினைவுகளை மறக்க முடியவில்லை
அன்பினால், பண்பினால் நட்பினால்
ஆளுமையால் விருந்தோம்பலால், கொடையால்
எங்கள் அனைவரது உள்ளங்களிலும்
குடியிருக்கும் உங்களை நாம்
என்றென்றும் நினைந்திருப்போம்.

"பவளவாசா"
கண்டி வீதி,
மீசாலை மேற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(CS48362) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி விமான நிலையத்தில் மேம்பட்ட வசதிகள் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 29

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் மேம்படுத்தப்பட்ட வசதிகளின்மையால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் தமிழகம்-சென்னைக்கான உத்தியோகபூர்வ விமான சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாரத்தில் 4 தினங்கள் சேவைகள் இடம்பெறுகின்றன. எனினும் விமான நிலையம் மேம்படுத்தப்பட்ட வசதிகளின்றி உள்ளது.

மழைகாலத்தில் விமான நிலையத்துக்குள் உள்நுழையும்போதும் விமான நிலையத்திலிருந்து வெளியேறும்போதும் பயணிகளின் உடைமைகள் மழையில் நனைவதுடன் பயணிகள் காத்திருக்கும் இடத்தில் சேறும் சகதியும் காணப்படுகின்றது.

பார்வையாளர்களுக்கான இருப்பிடவசதிகள் இல்லை. மழை, வெயில் காலங்களில் பயணிகள் அசௌகரியங்களுக்குள்ளாகாதவாறு பயணிக்க எந்தவொரு ஏற்பாடுகளுமில்லை.


இதனால் முதியோர், சிறுவர்கள் உட்பட பல தரப்பினரும் பாதிப்புக்குள்ளாகுகின்றனர். வாகனத் தரிப்பிடத்துக்கு என ஒதுக்கப்பட்ட இடம் மேற்கூரை இடப்படாது திறந்தவெளி இடமாகக் காணப்படுகிறது. இதனால், வாகனங்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லை.

இதேவேளை யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா பெருமளவு நிதியை ஒதுக்கியிருந்தபோதிலும் போதிய வசதிகள் ஏற்படுத்தப்படாமைக்கான காரணம் என்ன? வடமாகாணப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லையா? எனவும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

(ச-66)

# மன்னாரில் காணாமற்போன மீனவர்கள் புத்தளத்தில் மீட்பு

மன்னார், டிசெ. 29



முசலிப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை காயாக்குளியைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் அண்மையில் காணாமல் போயிருந்த நிலையில் புத்தளம் கற்பிட்டி கடற்பகுதியில் மீனவர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை மீட்கப்பட்டனர்.

கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் காயாக்குளி கடற்கரையில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 23 மற்றும் 19 வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர்கள் காணாமல் போயிருந்தனர். காணாமல் போன மீனவர்கள் இருவரையும் சக மீனவர்கள் தொடர்ச்சியாக தேடுதல் நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் புத்தளம் கற்பிட்டி கடற்பகுதியில் இயந்திரம் பழுதடைந்த நிலையில் படகொன்று காணப்பட்டதை கற்பிட்டி மீனவர்கள் அவதானித்தனர். அதனையடுத்து படகையும் அதற்குள் இருந்த இரு இளைஞர்களையும் மீட்டு கடற்கரைக்குக் கொண்டு வந்தனர்.

படகில் இருந்த இருவரும் சிலாவத்துறை காயாக்குளிப் பகுதியில் காணாமல் போன இளைஞர்கள் என்பதை உறுதிப்படுத்திய கற்பிட்டி மீனவர்கள், நேற்று செவ்வாய்க்கிழமை பழுதடைந்த படகு மற்றும் இரு மீனவ இளைஞர்களையும் காயாக்குளி மீனவர்களிடம் ஒப்படைத்தனர். மீட்கப்பட்ட இரு மீனவர்களுடனும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேரில் சென்று கலந்துரையாடினார்.

(எ-14-213)

# மார்கழி இசைவிழா மூன்றாம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 27

இந்தியத்துணைத் தூதரகம், நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு கலைக்கூடல் மற்றும்யாழ். வணிகர்கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசைவிழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று மாலை 4.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய முதல் நாள் நிகழ்வில், இந்தியத் துணைத்தூதரக 'இந்தியன் கோர்னர்' இசைப்பிரிவு மாணவர்களால் தமிழ்த்தாய் வாழ்த்தும், நல்லைக்கலா மந்திர் நடனாலாயத்தினரின் வரவேற்பு நடனமும், மங்கல இசையைத் தொடர்ந்து, இந்தியக் கலைஞர்களின் வயலின் இசை, பாரதியார் பாடல் நாட்டிய சமர்ப்பணம், விரலிசை நாத வந்தனம், சேர் பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மன்றும் கட்புல கலைகள் பீடத்தினரின் நாட்டிய நாடகம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

(எ-இ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



எங்களுடன் • 03 • 04 • 1964

எங்களைவிட்டு • 29 • 12 • 2021

எங்கள் அன்புச் சகோதரன்


### இரத்தினம் ரூபதாஸ்

ஐயா! நீ எங்களை விட்டு பிரிந்து சென்றாலும்
நீ எங்களுடன் வாழ்ந்த காலங்கள், உன்னுடைய பரிவு
அன்பு, நன்மை, உதவி இவையாவும் எங்களைவிட்டு
எந்நாளும் பிரியாது. என்றும் உனது நினைவில்
வாழ்ந்துவரும் சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்கள்.

*உனது நினைவுடன் வாழும்...*
அன்புச் சகோதரன்
பொபி அண்ணா

(CS/21765)1-6

## மரண அறிவித்தல்



தோற்றம் • 14 • 09 • 1956

மறைவு • 28 • 12 • 2022

### சோமசேகரம் புவனேஸ்வரன்

(முன்னாள் முத்துமாரி உரிமையாளர்-வட்டுக்கோட்டை)

விக்காவில் சிவகாமி அம்மன் கோவிலடி காரைநகரை பிறப்பிடமாகவும் மாவடி வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசேகரம் புவனேஸ்வரன் நேற்று (28.12.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சோமசேகரம் கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், பாலசுப்பிரமணியம் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பிறைமதியின் அன்புக் கணவரும், யுதர்சனா, ஹம்சியா, பிரதீப் (கண்ணா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்சனின் அன்பு மாமனும், யோகேஸ்வரன், ஞானேஸ்வரன், தனலட்சுமி, சந்திரா, கமலாம்பிகை, சற்குணதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மோகனதாஸ், ஜெயசங்கர், பாலகுமார், ரவிசங்கர், வளர்மதி, காலஞ்சென்ற செந்தில்நாதன், பாலசுப்பிரமணியம் (ரஞ்சன்), காலஞ்சென் சர்வேஸ்வரன், ஜெகநாதன், ஞானமலர், யோகதேவி ஆகியோரின் அன் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், ...ர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சங்கர் (மைத்துனர்) : 077 6680 289
மனைவி : 076 701 3510

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த (29.11.2022) அன்று சிவபதமடைந்த
எமது குலவிருட்சம்

### அமரர் கனகலிங்கம் முகுந்தன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.12.2022) வியாழக் கிழமை காலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப் பாக ஏற்று வருகைதருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நினைவுகளுடன்...

கொல்லங்கலட்டி.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் செல்வி தனுஷிகா சதாசிவம் (கஜானா)

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி
(A/L 2022 கணிதப் பிரிவு மாணவி)



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 31.03.2003 | 09.01.2022 |


திதி: வளர்பிறை ஸப்தமி
(29.12.2022)

வாடாமல் வீழ்ந்த
வாசப்பூவே
வாழாமல் சென்ற
பாசத்தாயே
எங்கள் உதிரத்தில் கலந்தது
உந்தன் நினைவே
யுகங்கள் கடந்தாலும்
எமக்குள் நீதான்
செல்லமே...

அல்வின் வீதி,
காரைநகர்

குடும்பத்தினர்
077 2807669

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவுகளில்



மண்ணில்
27.07.1951

விண்ணில்
29.11.2022

கடந்த (29.11.2022) அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர்
### றெஜி இராமச்சந்திரன் (ராஜன்)

*ஓடின மாத மொன்றும் .....*
*வாடின இதயங்கள், மலரவில்லை இன்றும்...*
*தேடினோம் உங்கள் நினைவுச் சுவடுகளை...*
*நாடி நிற்கின்றோம் ஆன்மா சாந்திபெற...*

அன்னாரின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்துகொண்டும், பல்வேறு ஊடகங்கள் வாயிலாகவும், அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றோம்.


அன்னாரின் 31ஆம் நாள் ஆன்ம இளைப்பாற்று வழிபாடுகள் அவரின் இல்லத்தில் இன்று (29.12.2022) வியாழக்கிழமை மதியம் 12.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இவ் வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

22/3, விதானையார் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 . 06 . 1939 | 28 . 12 . 2022 |



### திரு.சின்னத்தம்பு கணேசலிங்கம்

**(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி - பிரதேச வைத்தியசாலை, இளவாலை)**

இளவாலை வடக்கு இளவாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.சின்னத்தம்பு கணேசலிங்கம் அவர்கள் நேற்று (28.12.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு (மலாயன் பென்சனியர்) சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், திருநாவுக்கரசு ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மரு மகனும், காலஞ்சென்ற மகேஷ்வரதேவி அவர்களின் அன்புக் கணவரும், ரமேஷ் (கணினி பொறியியலாளர் - கனடா), பிரகதீஷ் (ஆசிரியர், யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி), Prof.சசிகேஷ் (பேராசிரியர், இரசாயனவியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காரிகாசிவதேவி, சரோஜினிதேவி, குமாரலிங்கம் (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவாஜினி (மருந்தாளர் - கனடா), சைலஜா (ஆசிரியர்- யா/உயர்புலம் குணபாலன் வித்தியால யம்), Dr.சசிகலா (போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கணதீபன், பிரியதர்சினி, கானுஜன், மதுசாயினி, ஹவிஷா, திஷாணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
021 221 1904

(CS 22230) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவின்...

'சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியைப் பெறுவதற்கான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியா - சீனாவின் நிலைப்பாடு என்ன?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த விடயத்தில் நாம் நடுவில் இறுகி நிற்கின்றோம். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதி உதவி பெறும் விடயத்தில் சீனா மத்தியஸ்தம் செய்து உதவி வருகின்றது. அது இந்தியாவுக்கு விருப்பம் இல்லை. ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு செயற்படும் நாடுகள் அவை. இந்த இரண்டு நாடுகளிடம் உதவியைப் பெற்றுக்கொண்டுதான் நாம் பயணிக்கின்றோம்.

சீனா மத்தியஸ்தம் வகிப்பதால் இந்தியா கொண்டுள்ள அதே நிலைப்பாட்டைப் போல் இன்னும் சில நாடுகளும் கொண்டுள்ளன. முக்கியமாக அமெரிக்கா. இதனால் இந்த விவகாரம் இழுபறியில் உள்ளது - என்றார். (அ-எ-22)

## ஆறுகால்மடத்தில்...

பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை இலக்கு வைத்தே போதைப் பொருள் மாத்திரைகள் விற்பனை செய்யப்பட்டு வந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் உப பரிசோதகர் தே. மேனன் தலைமையிலான குழுவினரே சந்தேகநபரைக் கைது செய்தனர்.

சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, சில நாள்களுக்கு முன்னரும் ஆறுகால்மடம் பகுதியில் ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இருவர் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். (அ-எ-26-23)

## போதை ஊசி...

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்தவராவார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் யாழ்ப்பாணத்தில் திணைக்களம் ஒன்றில் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றுபவர். கடந்த செவ்வாய்க்கிழமை காலை வேலைக்குச் சென்றுவிட்டு மதியம் வீட்டுக்கு வந்த இவர், உணவு கூட உட்கொள்ளாது வேறு சில இளைஞர்களுடன் சென்றுள்ளார். பின்னர் இவர் நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். தனக்கு உடல்நிலை சரியில்லை என்று தெரிவித்துவிட்டு அங்குள்ள மரக்குற்றி ஒன்றில் அமர்ந்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாலை 5 மணியளவில் அவர் திடீரென மயங்கி வீழ்ந்த நிலையில், அங்குள்ளவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாலை 6 மணியளவில் அவரைச் சேர்ப்பித்தனர். ஆயினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இளைஞரும், அவருடன் சென்ற மூவரும் போதைப் பொருளை ஊசி மூலம் உடலில் செலுத்தியுள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. இளைஞருடன் சென்றவர்களில் மூவர் ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றிய பின்னர் எஞ்சியிருந்த போதைப்பொருள் அனைத்தையும் இளைஞருக்கு ஏற்றியுள்ளனர் என்றும் விசாரணையில் கூறப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். இளைஞரின் உயிரிழப்புக்கு அதிகளவு போதைப் பொருள் உடலில் ஏற்றப்பட்டமையே காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் மூவர் தலைமறைவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் இதுவரை போதை ஊசியால் சுமார் 15க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்கள் அனைவரும் 30 வயதுக்கு உட்பட்டவர்களாவர். (அ-எ-26)

## சுதந்திரதின...

யின் மேலதிக செயலாளர் இளங்கோவன் தெரிவித்தார்.

சுதந்திர தின நிகழ்வுகள் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளன. அதன்பின்னர் பெப்ரவரி 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் அமைக்கப்படும் கலாசார மத்திய நிலையத்தின் முழுமையான செயற்பாட்டு நிகழ்வுடன், சுதந்திர தின நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அதற்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-எ-20)

## வீடுடைத்துத்...

கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி வடக்கு, மண்டுவிலில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

வீட்டிலிருந்தவர்கள் வெளியே சென்றிருந்த சமயம் வீட்டில் ஒருவர் மட்டுமே இருந்துள்ளார். அதை அறியாத திருடன் வீட்டின் கதவை உடைத்து உள்ளே நுழைய முயன்றுள்ளார். வீட்டுக்குள் இருந்தவர் சத்தம் கேட்டு சுதாகரித்துக் கொண்டு, அயலவர்களுக்கு அறிவித்ததை அடுத்து, திருடன் மடக்கிப் பிடிக்கப்பட்டான் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டவர், நன்றாகக் கவனிக்கப்பட்ட பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-27-159)

## தமிழ்...

அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ச வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவசரப்பட்டு அரசியல் தீர்வைக் கொண்டுவர முயலவில்லை. தேசிய இனப்பிரச்சினையால் தமிழர்கள் தொடர்ந்து பாதிக்கப்படக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டே அரசியல் தீர்வைக் காண்பதற்கான பயணத்தில் இறங்கியுள்ளார்.

தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கிடையிலான முரண்பாடுகளைக் களைந்துவிட்டு தமிழ் மக்களின் எதிர்கால நலனில் அக்கறை செலுத்தவேண்டும். அரசியல் தீர்வைக் காண்பதற்கான பயணத்தில் ஜனாதிபதியுடன் அவர்கள் கைகோர்க்கவேண்டும்.

நல்லிணக்கம் தொடர்பான பல நிறுவனங்கள் எனது அமைச்சின் கீழ் உள்ளன. அந்த நிறுவனங்கள் தங்கள் பணிகளைத் துரிதமாக முன்னெடுக்கின்றன - என்றார். (அ-எ-22)

## இலங்கையூடாக...

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. சீனாவில் இருந்து இலங்கை வழியாக மதுரை விமான நிலையம் சென்ற திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த தாய் மற்றும் மகள் இருவருக்கே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, அந்த விமானத்தில் பயணித்த இலங்கைப் பயணிகளுக்கு கொரோனாப் பரிசோதனை செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## ஈழத்துச்...

தினமும் அதிகாலை 5 மணி முதல் ஐயனார், சிவன் மூலமூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். காலை 7.30 மணிக்கு மணிவாசகப் பெருமான் நடேசர் சந்நிதானத்துக்கு எழுந்தருளி திருவெம்பாவை ஓதுதல் இடம்பெறும். காலை 9 மணிக்கு இடம்பெறும் வசந்தமண்டபப்பூசையை அடுத்து சுவாமி திருவீதி உலா இடம்பெறும்.

எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை பஞ்சரதப் பவனியும், மறுநாள் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணி தொடக்கம் ஆருத்திரா அபிஷேகமும் நடைபெறும். அதிகாலை 5 மணிக்கு ஆருத்திரா தரிசனம் இடம்பெற்று, பி.ப. 3 மணிக்கு நடைபெறும் திருவூடல் உற்சவத்தைத் தொடர்ந்து தீர்த்த உற்சவம் நடைபெறும். (அ-எ-250)

## சீனத்...

இலங்கைக்கான சீனப் பிரதித் தூதுவர் ஹு வெய், சீனத் தூதரக அரசியல் விவகார அதிகாரி லியோ சொங் உட்பட மூவர் கோட்டைப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர். இவர்களின் இந்தப் பயணம் சுற்றுலா ரீதியானது என்று கூறப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணம் கோட்டைக்குப் பொறுப்பான அலுவலர்களோ, அதிகாரிகளோ அங்கு இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-20-27)

## கொரோனா...

என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சுகாதாரத்துறை அமைச்சில் நேற்றுப் புதன்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உலகளாவிய ரீதியில் மீண்டும் கொரோனாப் பெருந் தொற்று பரவல் தீவிரமடைந்துள்ளது. இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் சடுதியாக அதிகரித்துள்ளது. இலங்கையில் கொரோனா சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் தளர்த்தப்பட்டுள்ளன.

கொரோனா சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் தொடர்பில் இன்னும் ஓரிரு நாள்களுக்குள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். நாட்டின் பொருளாதார நிலைமையை அவதானத்தில் கொண்டு அனைத்து தீர்மானங்களையும் எடுக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

முகக்கவசம் அணிதலை நாட்டு மக்கள் கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டும். மொத்த சனத்தொகையில் 70 சத வீதத்துக்கும் அதிகமானோர் மூன்றாவது தடுப்பூசி (பூஸ்டர்) இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை. நாட்டு மக்களும் தமது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் செயற்படவேண்டும்.

இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் மருந்துக் கொள்வனவு செய்வது தொடர்பில், சுகாதார அமைச்சர் என்ற ரீதியில் நான் இந்தியாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ பயணம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பொய்யான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய மருந்து உற்பத்தி தொடர்பில் சமூக மட்டத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களின் உண்மைத் தன்மையைத் தெரிந்து கொள்வதற்காகவே எனது தனிப்பட்ட செலவில் தான் இந்தியாவுக்குச் சென்றேன். இந்திய மருந்து உற்பத்தி நிறுவனம் எனது செலவுகளுக்குப் பொறுப்பேற்கவில்லை.

மருந்துக் கொள்வனவு திட்டமிட்ட வகையில் தாமதப்படுத்தப்படுகின்றது என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு முறையற்றது. அத்தியாவசிய உணவுப்பொருள்களை உடனடியாகக் கொள்வனவு செய்வதைப் போன்று மருந்துப் பொருள்களை விரைவாகக் கொள்வனவு செய்ய முடியாது.

விலை மனுக்கள் மற்றும் கட்டணத்தின் முற்பணத்தைச் செலுத்திய பின்னரே உரிய நிறுவனம் மருந்து உற்பத்தியை ஆரம்பிக்கும். உயிர் காக்கும் 14 வகையான மருந்துப் பொருள்கள் தேவையான அளவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு இல்லை என்று ஒருபோதும் கூறவில்லை. வெளிநாட்டுக் கையிருப்பு பற்றாக்குறையால் மருந்து கொள்வனவில் சிரமம் காணப்படுகிறது. ஆனால், மருந்துத் தட்டுப்பாடு நாட்டில் பாரதூரமாக இல்லை - என்றார். (அ-எ-இ)

## விக்னேஸ்வரன்...

யோசனையை ரெலோ இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் வரவேற்றுள்ளார்.

இணைய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னதாகக் கருத்துத் தெரிவித்திருந்த தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி. விக்னேஸ்வரன், தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லாத சூழலில் அது இனப் பிரச்சினைக்கான தீர்வில் பாதக நிலைமையைத் தோற்றுவிக்கும் என்று கூறியிருந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா தலைமையில் தமிழ்த் தேசியத் தரப்புகள் ஓரணியில் திரளலாம் என்றும் அவர் யோசனை தெரிவித்திருந்தார்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அதற்கு வரவேற்புத் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## சீன...

அதிருப்தி நிலவுகின்றது. அந்த அரிசி தரமற்றது என்று கூறும் கருத்துக்களும், காணொலிகளும் சமூக வலைத்தளங்களில் தொடர்ச்சியாகப் பகிரப்பட்டு வருகின்றன.

இந்த அரிசி பாடசாலை மாணவர்களுக்கு தலா 10 கிலோகிராம் என்ற அடிப்படையில் அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்தது. இதற்கென ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி சீன அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்பட்டிருந்தது.

இந்த அரிசியை உட்கொள்ளும் சிறுவர்கள் வயிற்றுவலி, ஒவ்வாமை போன்ற தொந்தரவுகளுக்கு உள்ளாகின்றனர் என்றும், அது உணவுக்கு உகந்ததாக இல்லை என்றும் சமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கை அதிகாரிகள் இது தொடர்பில் சோதனைகள் எவையும் மேற்கொண்டார்களா?, நன்கொடை என்றவுடன் அனைத்தையும் அனுமதிப்பதா? என்றும் சமூக வலைத்தளங்களில் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஆனால், மக்களின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கத் தரப்பில் இருந்து எந்தக் கருத்தும் வெளியிடப்படவில்லை. அதேநேரம், இந்த அரிசியால் ஏற்பட்ட பாதிப்பு என உத்தியோகபூர்வமாக எந்த சம்பவங்களும் பதிவாகவில்லை. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெடிபொருள் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.29

வலி.வடக்கு, ஜே/250 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஊரணிப் பகுதியில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

81 மில்லிமீற்றர் எறிகணை ஒன்றும், 60 மில்லிமீற்றர் ரக எறிகணை இரண்டும் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-23)


## புதுவருடக் கொண்டாட்டம்

இன்று 3:1 இலவசம்

அனைத்து இன்சுவை உணவுகள்
(நிபந்தனைக்குட்பட்டது)

+9421 222 6868, +94777 340 026

YouTube Yarlpardy

51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகை வியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- கணக்காளர் (ஆண்) : A/L வர்த்தக துறையில் படித்த கணினி அறிவுடைய ஆண் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- விற்பனை உதவியாளர் (ஆண்)

சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும் (CR 38865)(3/6)

நியூ லலிதாஸ் ஜுவல்லறி

இல.30, 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## உடனடி சேவை

A/C, Fridge, Washing Machine, Air Cooler, Water heater மற்றும் Computer Hardwar Service

தரமான உதிரிப்பாகங்களுடன் Spot Service.

தொடர்பு: 076 034 0301 (CS 48363)(2/6)

## பணியாளர்கள் தேவை

- கணக்கியல் அனுபவமுள்ள கணினி தரவு பதிவாளர்கள் தேவை.
- கணக்கு அறிவுடைய பகல், இரவு காவலாளிகள் தேவை

வெற்றிடங்கள் - 06

03.01.2023 ஆம் திகதி நேரில் வரவும்.

City Hardware & Stores

No. 55,57, Stanley Road, Jaffna

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன். 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A-9 பிரதான வீதியில் இருந்து 700 M தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 72 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன. (பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- ஜெயம் 077 24 17 589
077 02 67 619

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600M தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இருவழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும், சாவகச்சேரி நகரத்திற்கும் அரச, தனியார் பஸ் போக்குவரத்து சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)
ஒரு பரப்பின் விலை 675000 ரூபாய் மட்டுமே.
- பார்வையிடும் நேரம்:- காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

தொடர்பு:- ஜெயம் 077 8147 389
077 9865 457


# மரண அறிவித்தல்



## திருமதி இரத்தினம் பாக்கியம்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பாக்கியம் 25.12.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா ஆச்சிஅம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினம் அவர்களின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான பற்குணநாதன், மகேசானந்தன் மற்றும் இராசமலர், யோகமலர், தங்கமலர் (லண்டன்), கருணாமூர்த்தி (கனடா), புஸ்பமலர் (கனடா), யோகலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலசுந்தரி, துரைராசா, செல்வராஜ், சிவஞானசங்கர், சத்தியவதி, லோகேஸ்வரி, நகுலதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, செல்லம்மா, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, தம்பிப்பிள்ளை, சின்னத்துரை மற்றும் இந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும், கோகுலரஞ்சன், பர்மிலா, பவித்திரா, வித்தகன், கமலகரன், ஜெயக்குமார், பாஸ்கரன், வசந்தகுமாரன், கமல்ராஜ், மதனகுமார், ரமணகுமார், வோஜனா, மனோஜ், சுமங்கலி, ஜெந்தி, பிரியா, மனோஜி, கஜேந்திரன், அனுசியா, மேனகா, ஜேந்தன், கேம ஜீவனா, கேமடினோசா, மீறுஜா, நீதுஜா, நிரோசா, நிவேதா, பானுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அகிம்சா, தருஸ், ரித்மிகா, கவின், சுவிந்தன், பிசன், அஜேசன், அஸ்வித், சர்வின், சர்விகா, கிருத்தியன், ஜெய்வின், அகரன், திசயா, அகிம்சா, அனஸ்கா, சயானா, சகீரா, லோஜினா, தேவசீனா, சரத், ஆதிரன், ஸ்விதா, ஆறின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2022) வியாழக்கிழமை அவரது லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு த்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் னைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாயகர் வீதி,
ல்லூர் வடக்கு,
ாழ்ப்பாணம்.

077 691 3206
077 290 1237

தகவல்:
குடும்பத்தினர்

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்
10 . 06 . 1948



மறைவு
01 . 12 . 2022

கடந்த (01.12.2022) வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

## Dr.செல்வராசா சுந்தரமூர்த்தி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.12.2022) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் தும்பளை முத்துமாரி அம்மன் அந்தியேட்டி மடத்திலும் சபிண்டீகரணக் கிரியைகள் **31.12.2022 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்திலும்** நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.**

திகிரி ஒழுங்கை, தும்பளை,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.
077 670 1503

(21841) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com advt@uthayan.com

திருமதி திரு.உ. தயான்பர்சிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.